# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி: 91-044-2953 5806/2953 5816
தொலைநகல்: +91-044-2953 5893 மின்னஞ்சல்: tnerc@nic.in
இணையதளம்: www.tnerc.gov.in

**<u>மனு எண் வ.உ.வி.1/2021</u>**

**இந்தப் பொருளில்** : தமிழ்நாடு மாநிலத்தில் ஆண்டொன்றுக்கு 40 மில்லியன் யூனிட்டுகள் வணிகம் செய்வதற்காக திருவாளர் இக்ளவூட்ஸ் எனர்ஜி எல்.எல்.பி, நெ.81, மேற்கு வெங்கடசாமி ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்-641002

## 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 15(5) பிரிவின்படி அறிவிப்பு வெளியிடுதல்

1. தமிழ்நாடு மாநிலத்தில், மாநிலத்திற்குள் மின்சார வணிகம் செய்வதற்கு உரிமை வழங்குவதற்கான விண்ணப்பமானது, திருவாளர் இக்ளவூட்ஸ் எனர்ஜி எல்.எல்.பி. (M/s.eClouds Energy LLP) நெ.81, மேற்கு வெங்கடசாமி ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர்-641002 ஆல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரரின் முழுமையான விண்ணப்பத்தினை "www.ecloudsenergy.com" என்ற இணையதள முகவரியில் காணலாம்.

2. உத்தேசிக்கப்பட்ட உரிமமானது, தமிழ்நாடு மாநிலத்திற்குள் ஆண்டொன்றிற்கு 40 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கும் விற்பனை செய்வதற்குமானது மற்றும் அதன் பகுதி எதுவும், மாநிலத்திற்கு வெளியிலோ அல்லது மாநிலங்களுக்கிடையே உள்ள வணிகர் எவருக்குமோ விற்கப்படமாட்டது. உத்தேசிக்கப்பட்ட உரிமத்தின் பிற நிபந்தனைகள், 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (உரிமம் வழங்குதல்) ஒழுங்குமுறை விதிகளின் 15(4) ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க உட்பட்டிருக்கும்.

3. மேலேயுள்ள விண்ணப்பதாரர் சார்பாக மாநிலத்திற்குள் உரிமம் வழங்குவதற்காக, குறிப்புரைகள் / மறுப்புரைகள், எவையேனுமிருப்பின், அவற்றை கோருவதற்கு 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 15(5) பிரிவினை அனுசரித்து இதன் மூலம் அறிவிப்பு கொடுக்கப்படுகிறது. மேற்சொன்ன குறிப்புரைகள் / மறுப்புரைகள், எவையேனுமிருப்பின், அவை, விண்ணப்பதாரருக்கு அதன் நகல் வழங்கப்படுவதோடு 10-08-2021 அன்று அல்லது அதற்கு முன்பு மேலே குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள ஆணையத்தின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

4. பெறப்பட்ட மறுமொழிகளைப் பரிசீலித்த பின்பு, ஆணையம், தமிழ்நாடு மாநிலத்தில் ஆண்டொன்றுக்கு 40 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் வணிகம் செய்வதற்கு திருவாளர் இக்ளவூட்ஸ் எனர்ஜி எல்.எல்.பி நிறுவனத்திற்கு மாநிலத்திற்குள் வணிகம் செய்வதற்கு உரிமம் வழங்குவதை முடிவு செய்வதற்கு, தேவைப்படுமாயின் இது குறித்து விசாரணை செய்வதற்கான நாளை ஆணையம் குறிப்பிடும்.

/Sd/
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்